REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK
2021 ஜனவரி 25 திங்கட்கிழமை
தினகரன்
THINAKARAN
වරු. 89 இல. 21 | January 25, Monday, 2021 | 20பக்கங்கள் | 30/-

## வியாழன் முதல் கொவிட் தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கை
### –ஜனாதிபதி உறுதி



இந்திய அரசாங்கம் இலவசமாக வழங்கும் கொவிட் தடுப்பு மருந்தின் முதலாவது தொகுதி புதன்கிழமை நாட்டிற்கு கொண்டுவரப்படுமென ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். 06

## சத்தமிட்டுக் கொண்டிருப்பது அல்ல; செயலில் செய்து காட்டுவதே எனது வழி



### மீதமுள்ள நான்கு ஆண்டுகளில் எனது மக்களது அபிலாஷைகளை நிறைவேற்றுவேன்

வெறுமனே சத்தமிட்டுக் கொண்டிருப்பது எனது வழியல்ல,செயலில் செய்து காட்டுவதே எனது வழி என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கூறினார்.மீதமுள்ள நான்கு ஆண்டுகளில் மக்கள் அபிலாஷைகளை நிறைவேற்ற உறுதிபூண்டுள்ளதாகவும் அவர் வலியுறுத்தினார். பெரும் எதிர்பார்ப்புகளுடனேயே மக்கள் என்னை அதிகாரத்திற்கு தேர்ந்தெடுத்துள்ளனர்.

'கிராமத்துடன் கலந்துரையாடல்' நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அரச சேவையில் திறமையின்மையை நீக்குவது மக்களின் முக்கிய கோரிக்கையாகும். சுங்கத்துறையின் வினைத்திறனின்மை மற்றும் ஊழலைக் கட்டுப்படுத்த பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. அதன் வெற்றிக்கு தடையாக இருக்கும் அனைத்து அதிகாரிகளையு 06

## 75 கிராம சேவகர் பிரிவுகள் முடக்கம்

நாடளாவிய ரீதியில் 75 கிராம சேவகர் பிரிவுகள் முடக்கப்பட்டுள்ளதாக கொரோனா தடுப்பு செயலணி தெரிவித்துள்ளது.

இலங்கையில் கொரோனா தொற்று அதிகரிக்கும் பகுதிகள் உடன் அமுலுக்கு வரும் வகையில் முடக்கப்பட்டு வருவதுடன் கொரோனா பாதிப்பு குறைந்த பகுதிகள் முடக்கப்பட்ட நிலையில் தளர்த்தப்பட்டும் வருகிறது. கம்பஹா மாவட்டத்தில் 14 பிரிவுகளும் களுத்துறை, மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் தலா 11 பிரிவுகளும் கொழும்பில் 9 பிரிவுகளும் இரத்தினபுரியில் 6 பிரிவுகளும் வவுனியாவில் 4 பிரிவுகளும் மாத்தளையில் 3 பிரிவுகளும் மாத்தறை, கண்டி, குருணாகல் மாவட்டங்களில் இரு பிரிவுகளும் கேகாலை, ஹம்பாந்தோட்டை, அநுராதபுரம் மாவட்டங்களில் தலா ஒருபிரிவும் மூடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. 06



சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன எதிர்கால பாராளுமன்ற அமர்வுகள் குறித்து நேற்றுக் காலை பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை சந்தித்து கலந்துரையாடியபோது....

## தனிமைப்படுத்தல் பகு




# மேல் மாகாண

# இன்று முதல் மீண்டும் ஆரம்பம்

### – தரம் 11 வகுப்புகள் மட்டுமே முதலில் இடம்பெறும்

மேல் மாகாணத்தில் கல்விப் பொதுத் தராதர சாதாரண தர பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்களுக்காக மட்டும் இன்று முதல் பாடசாலைகள் திறக்கப்படவுள்ளதாக கல்வியமைச்சு அறிவித்துள்ளது. நாட்டின் ஏனைய பகுதிகளில் பாடசாலைகள் திறக்கப்பட்டுள்ள போதிலும் கொரோனா வைரஸ் பரவல் காரணமாக மேல் மாகாணத்திலுள்ள 06



### உயர்தர வகுப்புக்களை ஜூலையில் ஆரம்பிக்க முடிவு

கல்வியமைச்சர் ஜீ.எல். பீரிஸ் அறிவிப்பு

கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையின் முடிவுகள் மார்ச் மாதத்தின் இறுதிப் பகுதி அல்லது ஏப்ரல் மாதத்தின் ஆரம்ப 06



## நீதிமன்ற இல்ல கட்டட தொகுதி அடிக்கல் நாட்டும் வைபவம் இன்று

நீதிமன்ற இல்ல கட்டட தொகுதிக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு இன்று நடைபெறும். ஒரு கோடி 60 இலட்சம் ரூபா நிதி நிர்மாணப் பணிகளுக்கென செலவிடப்படும். நான்கு கட்டங்களாக இந்த நிர்மாணப் பணிகள் இடம்பெறவுள்ளன. பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் அளுத்கட உச்ச நீதிமன்ற கட்டடத் தொகுதி வளாகத்தில் இந்த அடிக்கல் நாட்டும் நிகழ்வு நடைபெறவுள்ளது.



### தமிழீழமோ, தனி நாடோ எமது கோரிக்கையே அல்ல;

## ஐக்கிய இலங்கைக்குள் ஒற்றுமையாக வாழ தமிழ் மக்கள் தயார் நிலையில்

### இரண்டாம், மூன்றாம் தர பிரஜையாக வாழ தயாரில்லை



இந்த நாட்டில் நாங்கள் ஒருபோதும் தனி நாடு கோரவில்லை என்றும் தமிழ் ஈழம் அல்லது தமிழ் நாடு உருவாக வேண்டுமென்ற கோரிக்கை தற்போது கிடையாது எனவும் தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார். 06

## TV தொகுப்பாளர் லாரி கிங் கொரோனா தொற்றால் காலமானார்



சிரேஷ்ட அமெரிக்க தொலைக் காட்சி தொகுப்பாளரான லாரி கிங் கொரோனா தொற்றுக்குள்ளாகி உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. சிடார்ஸ்சினாய் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த அவர் நேற்று காலை தனது 87 ஆவது வயதில் 06

### நாட்டில் இன்னமும் தீவிரவாத, பயங்கரவாத சக்திகளின் அச்சுறுத்தல்

## பயங்கரவாத தடை சட்டம் தொடர்ந்தும் அமுலில் இருக்க வேண்டியது அவசியம்

### மாற்றங்கள் கொண்டு வருவதற்கு சரத் வீரசேகர எதிர்ப்பு

நாட்டிலிருந்து பயங்கரவாதமும் தீவிரவாதமும் இல்லாமல் போகின்ற வரை பயங்கரவாத தடைச்சட்டம் தொடர்ந்தும் நீடிப்பது அவசியம் என அமைச்சர் சரத்வீரசேகர தெரிவித்துள்ளார்.

பயங்கரவாத தடைச்சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்வதற்கான முயற்சிகள் வெற்றியளிக்கவில்லை என அமைச்சர் தெரிவித்துள்ளார்.

நாட்டில் தீவிரவாத பயங்கரவாத சக்திகள் காணப்படுகின்ற வரையில் பயங்கரவாத தடைச்சட்டம் நீடிக்கவேண்டும் என்பதே 06



### தனிமைப்படுத்தல் விதிமுறைகள் தொடர்பாக

## மேல் மாகாணத்தில் இனி விசேட கண்காணிப்பு

மேல்மாகாணத்தில் எதிர்வரும் தினங்களில் தனிமைப்படுத்தல் விதிமுறைகள் கடைப்பிடிக்கப்படுகின்றனவா என்பது தொடர்பில் விசேட கண்காணிப்பு நடவடிக்கைகள் இடம்பெறவுள்ளதுடன் உடனடி அன்டிஜன் பரிசோதனைகளும் முன்னெடுக்கப்படவுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ் மாஅதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார். 06



### சுகிர்தராஜனின் நினைவேந்தல் நேற்று கிழக்கில் அனுஷ்டிப்பு



பெரியபோரதீவு தினகரன், கல்லடி குறுப் நிருபர்கள்

ஊடகவியலாளர் சுப்பிரமணியம் சுகிர்தராஜனின் 15 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு நேற்று மட்டக்களப்பில் 06



### 33,000 மெ.தொன் சீமெந்து; 720 மெ.தொன் டீசல்

## திருமலை கடலில் பாறையில் மோதிய நிலையில் சரக்கு கப்பல்

அபூதாபியிலிருந்து

### 14 நாள் தனிமைப்படுத்தலின் பின்னர்

## ஹக்கீம், வாசுதேவ நேற்று வீடு திரும்பினர்